பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 03 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரயில்வேத்துறையில் வரும் நிதியாண்டுக்கான கூடுதல் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மக்களவையில் இன்று நடைபெற்றது.

2. மாலுமிகளின் பாதுகாப்புக்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவின் கிழக்காசிய கொள்கையில் வியட்நாம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஈரான் பாதுகாப்பு தலைவர் **Ali Larijani** கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

5. இந்திய கால்பந்து லீக் போட்டியில் ராஜஸ்தான் **FC** அணி, **Real** காஷ்மீர் அணியை வென்றது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

ரயில்வேத்துறையில் வரும் நிதியாண்டுக்கான கூடுதல் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மக்களவையில் இன்று நடைபெற்றது.

இந்த விவாதத்தில் பேசிய பிஜேபி உறுப்பினர் மாளவிகா தேவி, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ரயில்வேயின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

நிதிநிலை அறிக்கையில் ரயில்வேக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதன்மூலம் வருவாய் அதிகரிப்பதுடன், பயணிகளின் வசதிகளும் மேம்படும் என்று தெரிவித்தார்.

படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில், கிழக்கு — மேற்கு சரக்கு ரயில்தடம், கவாச் பாதுகாப்புத் திட்டம், ரயில் மின்மயமாக்கல், இரட்டை ரயில் பாதைப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இதில் பேசிய திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் சதாப்தி ராய், **341** ரயில்களுக்கு **Pantry** உணவக சேவை இல்லை என்று குறை கூறியுள்ளார்.

ரயில்களில் தரமான உணவுகள் வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

மாலுமிகளின் பாதுகாப்புக்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு ஏற்றிவந்த **Shivalik, Nanda Devi** கப்பல்களின் மாலுமிகளுடன் உரையாற்றியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உலகளாவிய பிரச்சினையின்போதிலும் பாதுகாப்பாக கப்பல்கள் இந்தியா வந்தடைந்தது மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

**Hormuz** நீரிணை வழியாக சமையல் எரிவாயு கப்பல்கள் பாதுகாப்பாக நமது துறைமுகம் வந்தடைந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

வளைகுடா பகுதியில் உள்ள அனைத்து இந்திய கப்பல்களும் பாதுகாப்பாக இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கப்பல் அமைச்சக சிறப்பு செயலாளர் திரு ராஜேஷ்குமார் சின்ஹா, கடந்த **24** மணிநேரத்தில் **161** இந்தி மாலுமிகள் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டதாக தெரிவித்தார்.

குஜராத்தின் **Kandla** துறைமுகத்துக்கு இன்று அதிகாலை எரிவாயு கப்பல் நந்தாதேவி பாதுகாப்பாக வந்தடைந்ததாக அவர் கூறினார்.

நந்தாதேவி, ஷிவாலிக் கப்பல்களிலிருந்து எரிவாயு சிறிய கப்பல்களில் ஏற்றி நாட்டின் பல்வேறு துறைமுகங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சுற்றுச்சூழலை பாதுகாக்க பசுமை பொருளாதாரம் மிகவும் முக்கியமானது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிலையான வர்த்தக உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் எரிசக்தி தேவைக்கேற்ப பசுமை எரிசக்தி கட்டமைப்பை பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலகளாவிய சுற்றுச்சூழல் நெறிமுறைகளை பின்பற்றி இந்தியா பாதுகாப்பான எரிசக்தி பயன்பாட்டில் ஈடுபட்டு வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வியட்நாம் உடனான உறவுகளை மேம்படுத்த ஆவலுடன் இருப்பதாக மத்திய சிறுபான்மையின அமைச்சக செயலர் டாக்டர் சந்திரசேகர் குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், வியட்நாம் இணையமைச்சர் **Thong**-வுடன் ஆலோசனை மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் கிழக்காசிய கொள்கையில் வியட்நாம் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

இந்தியா — வியட்நாம் இடையே கலாச்சார வரலாற்று உறவுகளை அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட புத்தரின் புனித சின்னங்கள் வியட்நாமில் காட்சிக்கு வைக்கப்பட்டதை டாக்டர் சந்திரசேகர் குமார் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

இந்தியா — ரஷ்யா இடையே தீவிரவாத தடுப்பு, ஐ நா பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

புதுதில்லி வந்துள்ள ரஷ்ய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அலெக்சாண்டர் **Alimov,** வெளியுறவுத்துறை கிழக்கு பிராந்திய செயலர் சிபி ஜார்ஜுடன் இந்தியா — ரஷ்யா ஐ நா ஆலோசகர் கூட்டத்தில் பேசினார்.

ஐ நா — வில் எழுப்பும் பிரச்சினைகள் குறித்து இரு நாடுகளும் கருத்துகளை தெரிவித்ததாக வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

ஐ நா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம், ஐ நா அமைதிப்படை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஈரான் பாதுகாப்பு தலைவர் **Ali Larijani** கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Israel Katz** தெரிவித்துள்ளார்.

ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் **Ali Larijani** பொறுப்பேற்றார்.

ஈரானின் மறைந்த தலைவர் அயதுல்லா கமேனியின் ஆலோசகராக இவர் பணியாற்றினார்.

மேலும், கடந்த **2008** முதல் **2020**-ஆம் ஆண்டு வரை ஈரான் நாடாளுமன்ற அவைத்தலைவராக அவர் பதவி வகித்தார்.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் **Basij** துணை ராணுவப்படையின் கமாண்டர் **Soleimani**-யும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

கேரளத்தில் தேர்தல் ஆணையம் ஐந்து மூத்த அதிகாரிகளை இடமாற்றம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

நாளை காலை இந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோழிக்கோடு காவல்துறை ஆணையராக திரு மெர்லின் ஜோசப் மற்றும் திரிசூர் காவல்துறை ஆணையராக தாம்சன் ஜோஸும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆலப்புழா மாவட்ட ஆட்சியராக திரு இன்பசேகரும், தளிப்பரம்பு வருவாய் கோட்டாட்சியராக திருமதி வந்தனாவும், கன்னூர் தலைமை

பதிவாளராக திரு சச்சின் கிருஷ்ணாவும் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட இந்த அதிகாரிகளுக்கு தேர்தல் தொடர்பான பணிகள் வழங்கக் கூடாது என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>

கேரளம் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள **55** வேட்பாளர்களின் பட்டியலை காங்கிரஸ் கட்சி இன்று வெளியிட்டுள்ளது.

கேரளம் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு **V D Satheesan** - பரவூரிலிருந்தும், **Tiruvanchur** ராதாகிருஷ்ணன் - கோட்டையத்தில் இருந்தும், ரமேஷ் சென்னிதலா - ஹரிப்பாடு தொகுதியிலும் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள **291** வேட்பாளர்களின் பட்டியலை திரிணாமுல் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

அக்கட்சித் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, **Dhabanipur** தொகுதியிலிருந்து போட்டியிட உள்ளார்.

மேற்குவங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவர் சுபேந்து அதிகாரி, பிஜேபி சார்பாக, செல்வி மம்தா பானர்ஜியை எதிர்த்து போட்டியிட உள்ளார்

திரிணாமுல் காங்கிரஸ் சார்பாக, 135 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீண்டும் போட்டியிட உள்ளனர்.

கட்சியில் மொத்தம் உள்ள 291 வேட்பாளர்களில் 52 பேர் பெண்கள் ஆவார்.

<<<<<<>>>>>

ஆந்திரப்பிரதேசத்தில் சமையல் எரிவாயு விநியோகம் குறித்து முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அமராவதி தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் 14 ஆயிரம் மெட்ரிக் டன் சமையல் எரிவாயு இருப்பில் உள்ளதாக கூறினார்.

ஆந்திரப்பிரதேசத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு இல்லை என்றும், மருத்துவமனைகள், உணவகங்களுக்கு போதிய சமையல்

எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் அடுத்த **15** நாட்களுக்கு விநியோகம் செய்வதற்கான சமையல் எரிவாயு இருப்பில் உள்ளதாக திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

<<<<<>>>>>

தென்தமிழகம் மற்றும் வடதமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த **48** மணிநேரத்தில் இடியுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குனர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 43 Sec. )***

இதனிடையே, உதகை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக இன்று ஆலங்கட்டி மழை பெய்தது.

கோடை காலத்தில் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் — 31 Sec. )***

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**இந்திய கால்பந்து லீக் போட்டியில் ராஜஸ்தான் FC அணி, Real காஷ்மீர் அணியை வென்றது.**

**ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ராஜஸ்தான் அணி வெற்றிபெற்றது.**

**<<<<<<END>>>>>**